# பாலகுமாரன்



# குன்றிமணி

நிசும்ப சூதனி என்றவொரு சிற்பம். தஞ்சையை ஆண்ட விஜயாலய சோழன் என்ற மன்னர் செய்தது. உடையார் ஸ்ரீ ராஜராஜத்தேவர் காலத்தில் பல நிவந்தங்கள் விட்டு மிகப் பிரசித்தமாய் வளர்க்கப்பட்டது.

அந்தக் கோவிலுக்குள் என்னை உள்ளே அழைத்து சாக்த உபாசனை செய்கின்ற ஒரு அந்தணர் அந்த உருவச்சிலையின் ஆடைகள் மொத்தமும் அவிழ்த்து, இந்தச்சிலை எப்படியிருக்கிறது பார். இது ஏன் இப்படி இருக்கிறது என்று என்னிடம் கேள்வி கேட்டார்.

அழகுதானே நாம் அனைவரும் ஆராதிப்பது. அந்த அழகு என்ற விஷயத்திற்கு எதிர்ப்பதமாய் கோரமான உருவமாக இருந்தது. கோரமும் மிக யதார்த்தமாக இருந்தது.

யாளியின் முகமோ, விலங்கு உருவமோ அல்லாது ஒரு பெண்ணையே, அவள் கோரமாக இருந்தால் எப்படியிருப்பாள் என்று சிலை செதுக்கப்பட்டிருந்தது.

நல்ல கருங்கல் சிலை. உயர்ந்த கல். பச்சை ஓடியிருக்கிறது. கபாலம் போன்ற முகம். அதிலிருந்து சில ரோமங்கள். வற்றிய முலை. மெல்லிய கைகள். மூட்டு எலும்புகள் துருத்திக் கொண்டிருக்கின்றன.

விலா எலும்புகள் நன்கு தெரிகின்றன. ஆனால், எல்லாக் கைகளிலும் ஆயுதங்கள் ஏந்தி மிக உக்கிரமாக இருக்கிறாள். ஸம்ஹாரம் செய்கின்ற ஒரு ஆவேசத்தில் இருக்கிறாள்.

நாம் துர்கையை வடிவழகாகச் செய்வோமல்லவா. அவள் ஆயுதம் ஏந்தி இருந்தாலும் அழகி என்று அருகே போய் நிற்போம் அல்லவா. அருகே போய் நிற்கவே முடியாத அளவுக்கு ஒரு கோர சொரூபத்தைச் சிற்பி செய்திருக்கிறார்.

ஏன் இப்படி என்று நானும் அவரிடம் கேட்டேன். தூமாவதி என்ற தேவதை இப்படியிருப்பாள் என்று சாக்த உபாசனையில் சொல்லப்படுகிறது என்று விளக்கினார்.

சரி இது ஏதோ சாக்த உபாசக சாத்திரம். ஒரு சிற்பியினுடைய எண்ணம் என்னவாக இருக்கும். எதற்காக இப்படியொரு கோர உருவத்தைத் தெய்வமாகச் சிருஷ்டித்திருக்கிறார்கள் என்று யோசித்துப் பார்க்க எனக்கொன்று புலப்பட்டது.

எதை அழகு என்று சொல்கிறாயோ அதுவே வேறொரு ரூபமெடுத்து உன் எதிரே வந்து உன்னைப் பயமுறுத்தும். எதை உயர்வு என்று சொல்கிறாயோ அதுவே தாழ்ச்சி என்றும் மயங்க வைக்கும்.

எது உத்தமம் என்று சொல்கிறாயோ அதுவே அதர்மமாக உருவெடுத்து உன் எதிரே வந்து நிற்கும். எனவே எல்லா விஷயத்திற்கும் இரண்டு பக்கங்கள் உண்டு.

நல்லது என்று நீ எதைச் சொன்னாலும் அதில் ஒரு கெட்டதும் இருக்கும். கெட்டது என்று எதைச் சொன்னாலும் ஒரு நல்லதும் இருக்கும்.

போர் என்பது என்ன? ஒரு கொலைத் தொழில். ஒருவரையொருவர் வெட்டிக் கொல்வது. படுகாயப்படுத்துவது. ஊர்கள் எரிப்பது. பெண்டிரையும், குழந்தையையும் கவர்ந்து வந்து தனியே வேளம் அமைத்து இனிமேல் நீ எனக்குச் சொந்தம் என்று உறுமுவது.

ஒரு பக்கம் இத்தனைக் கோரரூபம் காட்டுகிற போர், அந்நியர் வந்து ஆக்ரமிக்கிற பொழுது தடுத்தி நிறுத்தி ஓடஓட விரட்டுகின்ற நல்லதும் இருக்கிறதே. இந்த உலகம் இரட்டைகளின் பிறப்பிடம். எல்லாமுமே இரண்டாக இருக்கின்ற இடம்.

எனவே, சிற்பம்தான் உலகத்தில் மிகப்பெரிய விஷயம் என்றால் அந்தச் சிற்பமே கூட எவருக்கும் மிகப்பெரிய தொந்தரவாய் வந்துவிடும். அதனால்தான் உயர்வு என்று இந்த உலகத்தில் எந்த விஷயமும் இல்லை என்ற முடிவுக்கு நான் வந்தேன்.

அந்தணன் உயர்வு என்றால் அந்தணனால் அழிவும் உண்டு. மறவன்தான் வீரமென்றால் பயந்து ஓடுகின்ற மறவனும் உண்டு. சிற்பிதான் மிகப்பெரிய படைப்பாளி என்றால் அவனால் அழிக்கவும் கூடும்.

கடவுள் படைத்த சிற்பத்தை அழித்து, கடவுள்போல உள்ள சிற்பத்தைப் படைக்கப் போகிறோம். எந்தப் பாறையும் ஒரு சிற்பமல்லவா. இயற்கை வடித்ததல்லவா. அதைச் சிதைக்க நமக்கு என்ன உரிமை உண்டு என்று நான் யோசிக்கிறேன். இதைத்தான் அந்தச் சிற்பம் சொல்கிறது.

யுத்தம் என்பதைக் கோரமாக, மரணத்தின் சமீபமாக, மரணம் என்பதை அச்சமூட்டும் விஷயமாக, இந்தச் சிற்பம் ஒரு சத்தியத்தை ஒரு உண்மையுடன் சொல்கிறது.

பெரிய கொங்கைகளுடன், குறுகிய இடுப்புடன், அழகிய பிருஷ்டத்துடன் கையில் சூலம் ஏந்தி மகிஷாசுரனை கொல்லுவது போல் நடித்துக் கொண்டிருக்கிற சிற்பமாக இல்லாமல்,

ஓங்கியிருக்கிற கை மண்டையில் இறங்கினால் கபால மோட்சம் என்கிற வேகத்தை அந்தக் கைகளில் காட்டி, முகத்தில் மரணத்தின் கோர சொரூபத்தையும் காட்டியிருக்கிறான்.

அழகிய கடவுளின் கோர வடிவம் அது. ஆக, கடவுள் என்பதையே கோரமாக இந்தச் சிற்பி காட்டுகிறான் எனில் இதைவிடச் சத்தியம் என்ன இருக்க முடியும்.